# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 303/2019**

Prosecution witness:3

| | | | |
|---|---|---|---|
| Name: | உலகநாதன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused absent. Petition U/s 317 crpc filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 17.07.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.12.2018 ம் தேதி 15.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும்போது சார்பு ஆய்வாளர்-திவான்மைதீன் மற்றும் எதிரிகள் தங்கராஜ், ராகுல்ராஜேந்திரன், டிலைட்மேத்யூ, விஜிபாபு மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் நிலையம் வந்து தலைமறைவு எதிரி சிவராஜ் ஆகியோரை மேற்குறிப்பிட்டு கொடுத்த பிரிவு -57 ன் படியான விரிவான அறிக்கையை பெற்று பார்வையிட்டு நிலைய குற்ற எண் 596/2018, ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act - ன் கீழான வழக்கு பதிவு செய்து எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் படிவம் -91 னுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் ராஜ்குமார்,

முத்துக்குமரன், சிலம்பரசன், கண்ணன், தங்கராஜ், சார்பு ஆய்வாளர்-திவான் மைதீனை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தலைமறைவு எதிரி-சிவராஜ் என்பவரை 07.01.2019 ம் தேதி 14.00 மணிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனை முன்பு கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 18.01.2019 ம் தேதி வழக்கின் சொத்துக்களை இரசாயன பகுப்புக்கு அனுப்பி அறிக்கை பெற்றுத்தரும்படி வேண்டுகோள் கடிதம் தயார் செய்து நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். பின்னர் மதுரை இரசாயன பகுப்பாய்வு கூடத்தில் இருந்து அறிக்கை வரப்பெற்றதும் அந்த அறிக்கையின் அடிப்படையில் பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பி வைத்த காவலர் கண்ணன் மற்றும்நீதிமன்ற தலைமை எழுத்தர்-திரு.குருசாமி, அறிவியல் அலுவலர் -திரு. இராமச்சந்திரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நான் சேகரித்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய போதிய முகாந்திரம் காணப்பட்டதால் 29.01.2019 அன்று என் புலனாய்வை முடித்து எதிரிகளின் மீது ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act - ன் கீழ் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 9 ஆகும். படிவம் -91 அ.சா.ஆ. 10 ஆகும். பகுப்பாய்வு வேண்டுகோள் கடிதம்.அ.சா.ஆ. 11 ஆகும் பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ. 12 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தகவல் கிடைத்தபோது நான் நிலையத்தில் இல்லை என்றால் சரிதான். நான் ஓட்டுநருடன் காவல் வாகனத்தில் சரகத்தில் பணிபுரிந்தேன். அனுமதிக்கடிதம் பணிபுரியும் இடத்திற்கு நிலையத்தில் இருந்து வரப்பெற்றது. சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களில்

எதிரி-சிவராஜின் பெயர் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த எதிரிகள் எவரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான். உங்களையும் இருசக்கரவாகனத்தையும் சோதனை செய்யவேண்டும் என எதிரிகளிடம் சார்பு ஆய்வாளர் கேட்டதாக காவலர்-சிலம்பரசன் வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விசாரித்தபோது அவ்வாறு குறிப்பிட்டதாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி-சிவராஜன் என்பவரிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்பபடவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியை கைதுசெய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் எதிரியிடம் இருந்து கஞ்சா எதுவும் இவ்வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முறையாக சாட்சிகள் எவரையும் விசாரணை செய்யாமலும் ஆவணங்களை முறையாக பரிசீலனை செய்யாமலும் தங்கள் காவல் நிலையத்தில் போடப்பட்டிருந்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக இறுதி அறிக்கை தாக்கல் செய்து அதனை அனுசரித்து உண்மைக்கு புறம்பாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் குற்றச்சாட்டுக்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.